**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் : திண்டுக்கல்**

முன்னிலை: திரு.கா.இன்பகார்த்திக், B.A., L.L.M.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திண்டுக்கல்.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் திங்கட்கிழமை

சுருக்குமுறை வழக்கு எண்.883/2026

குற்றமுறையிடுபவர் : தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக
துணை இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
திண்டுக்கல்.

குற்றம் சாட்டப்படுபவர் பெயர் : திரு.K. தங்கராஜ், வயது 55,
த/பெ. காளிமுத்து,
மேலாளர்,
ஏ.ஆர் டெய்ரி புட் பிரைவேட் லிமிடெட்,
க.எண்.10/5C, மதுரை ரோடு,
SR. நகர், ஏ.வெள்ளோளடு கிராமம்,
பேகம்பூர் அஞ்சல்,
திண்டுக்கல்.

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 10.08.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.எம்.விஜயேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.நாகநந்தினி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீர்ப்புரை**

**1. புகாரின் சுருக்கம் :–**

**i.** திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் அஞ்சல். SR நகர் ஏ.வெள்ளோடு கிராமம், க.எண்.10/5–C மதுரை ரோடு என்ற முகவரியில் ஏ.ஆர் டெய்ரி புட் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது. எதிரி மேற்படி தொழிற்சாலையின் மேலாளர் ஆவார்.

**ii.** கடந்த 25.04.2023ம் தேதி முற்பகல் 7.30 மணியளவில் திரு.சேவியர் Ghee Section–ல் தரையை தண்ணீர் ஊற்றி கழுவி கொண்டிருந்த சமயம் கீழே விழுந்தபோது, இடது கையை கீழே ஊன்றியதில் இடது கை மணிக்கட்டு பகுதியில் காயம் ஏற்பட்ட சிகிச்சை முடிந்து 03.07.2023ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார். கடந்த 29.05.2023ம் தேதி பகல் 1.30 மணியளவில் திரு.ஜானி என்பவர் Milk Packing இயந்திரத்தில் பிளாஸ்டிக் கலர் ரோல் Sealing Jaw–ல் சிக்கிக் கொண்டதை இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோது, சரி செய்ததால், இடது கை சூடாக இருந்த Sealing Jaw–ல் சிக்கி ஏற்பட்ட விபத்தில் இடது கையில் ஆள்காட்டி விரல் நுனிப்பகுதியில் காயம் ஏற்பட்டு சிகிச்சை முடிந்து 28.07.2023ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார்.

**iii.** மேற்படி தொழிற்சாலையில் திரு.சேவியர் மற்றும் திரு.ஜானி ஆகியோருக்கு ஏற்பட்ட விபத்து காரணமாக அவர்கள் இருவரும் 48 மணி நேரத்திற்குள் பணிக்கு திரும்ப இயலவில்லை. விபத்து தொடர்பாக அபாயகரமான நிகழ்வை உள்ளடக்கிய விபத்து அறிக்கை படிவம் 18 மற்றும் விபத்து தொடர்பான கூடுதல் விவரங்கள் அடங்கிய படிவம் 18B ஆகியவற்றை உரிய கால கெடுவிற்குள் ஆய்வாளருக்கு தொழிற்சாலையின் மேலாளரான எதிரி அனுப்பி வைக்கவில்லை.

**iv.** தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 96(4)–ன் கீழ் தொழிற்சாலையில் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு அதனால், ஏற்பட்ட உடற்காயத்தினால், அவர் 48 மணி நேரம் வேலைக்கு வர இயலாவிட்டால், மேற்படி 48 மணி நேரம் முடிவுற்று 24 மணி நேரத்திற்குள் ஆய்வாளருக்கு விபத்து தொடர்பான அறிக்கை படிவம் எண்.18ல் தொழிற்சாலையின் மேலாளர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**v.** தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 96(6)–ன் கீழ் ஒருவருக்கு

விபத்து ஏற்பட்ட அதனால் ஏற்பட்ட உடற்காயத்தினால் ஊனத்துடனோ அல்லது ஊனம் ஏதுமின்றியோ 21 நாட்களுக்கு மேல் பணிக்கு வர இயலாவிட்டாலும் மற்றும் விபத்து ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட உடற்காயத்தினால் இழப்பீடு பெறும் அளவிற்கு ஊனம் ஏற்பட்டு பணிக்கு திரும்பினாலோ சம்பந்தப்பட்ட விபத்து நடந்த 28 நாட்களுக்குள்ளும், மேலும், சம்பந்தப்பட்ட நபர் விபத்து நடந்த 28 நாட்களுக்குள்ளும், மேலும் சம்பந்தப்பட்ட நபர் பணிக்கு திரும்பும் வரை அடுத்து ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையும் விபத்து தொடர்பான கூடுதல் விபரங்களை படிவம் எண்.18Bல் ஆய்வாளருக்கு தொழிற்சாலையின் மேலாளரால் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**vi.** தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 61F–ன் கீழ் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல் நலனை உறுதி செய்யும் வகையில் தொழிற்சாலையில் பணி சூழல் அமைத்து பராமரித்து மேற்பார்வை செய்திட வேண்டும். தொழிற்சாலையில் யாருக்கும் உடற்காயம் ஏற்படுத்தும் வண்ணம் எந்தவொரு பணிமுறையோ அல்லது வேலையோ செய்யக்கூடாது.

**vii.** தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 96(1)(2)–ன் கீழ் தொழிற்சாலையில் ஏற்படும் விபத்து அல்லது ஆபத்தான நடவடிக்கைகள் பற்றி உடனடியாக தொழிற்சாலை ஆய்வாளருக்கு தொலைபேசி, தந்தி அல்லது தனி நபர் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும், மேற்படி விபத்தில் இறந்த அல்லது காயமுற்ற நபர்கள் பற்றி தொழிற்சாலையின் மேலாளர் ஆய்வாளருக்கு விபத்து நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள்ளாக படிவம் 18 மூலமாக தனி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**viii.** ஆனால், மேற்படி தொழிற்சாலையில் மேற்படி தேதிகளில் நடைபெற்ற விபத்து பற்றிய படிவம் 18, விபத்துகள் நடைபெற்று 21

நாட்களுக்குள் பணிக்கு திரும்பியவர் பற்றிய எழுத்து மூலமான அறிக்கை. விபத்து தொடர்பான கூடுதல் விபரங்கள் அடங்கிய படிவம் 18B ஆகியவற்றை உரிய காலத்தில் மேற்படி தொழிற்சாலையின் மேலாளரான எதிரி தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவில்லை. மேலும், தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உடற்காயம் ஏற்படுத்தும் வகையிலும் பணிகளை மேற்கொள்ளச் சொல்லி மேற்படி விதிகளை மீறி எதிரி செயல்பட்டு தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார். எனவே, திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அவர்கள் எதிரி மீது இத்தனிப் புகாரை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி புகாரானது இந்நீதின்றத்தில் சுருக்குமுறை வழக்கு எண்.883/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானதும், எதிரி மீதான தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் படியான இவ்வழக்கு குற்றங்களின் சராம்சத்தை எதிரிக்கு விளக்கி கூறி வினவிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

3. புகார்தாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. புகார்தாரர் தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் u/s. 351(1)(b) BNSS பிரிவின் கீழ் வினவியபோது எதிரி, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் உண்மைதான் என்றும், குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ முன்னிடப்படவில்லை.

5. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களின் மூலமாகவும், புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரியும் அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே, புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியை தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து தகுந்த தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

6. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு உண்மைதான் என்றும், எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும், இவ்வழக்கு குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

7. அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றவாணங்கள் ஆகியவற்றை பரிசீலிக்கையில், திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் அஞ்சல். SR நகர் ஏ.வெள்ளோடு கிராமம், க.எண்.10/5–C மதுரை ரோடு என்ற முகவரியில் ஏ.ஆர் டெய்ரி புட் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது என்பதும், கடந்த 25.04.2023ம் தேதி முற்பகல் 7.30 மணியளவில் திரு.சேவியர் Ghee Section–ல் தரையை தண்ணீர் ஊற்றி கழுவி கொண்டிருந்த சமயம் கீழே விழுந்தபோது, இடது கையை கீழே ஊன்றியதில் இடது கை மணிக்கட்டு பகுதியில் காயம் ஏற்பட்ட சிகிச்சை முடிந்து 03.07.2023ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார் என்பதும், கடந்த 29.05.2023ம் தேதி பகல் 1.30 மணியளவில் திரு.ஜானி என்பவர் Milk Packing இயந்திரத்தில்

பிளாஸ்டிக் கலர் ரோல் Sealing Jaw–ல் சிக்கிக் கொட்தை இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோது, சரி செய்ததால், இடது கை சூடாக இருந்த Sealing Jaw–ல் சிக்கி ஏற்பட்ட விபத்தில் இடது கையில் ஆள்காட்டி விரல் நுனிப்பகுதியில் காயம் ஏற்பட்டு சிகிச்சை முடிந்து 28.07.2023ம் தேதி பணிக்கு திரும்பியுள்ளார் என்பதும், மேற்படி விபத்து காலங்களில் எதிரி மேற்படி தொழிற்சாலையின் மேலாளராக பணியாற்றியுள்ளார் என்பதும், மேற்படி தொழிற்சாலையில் மேற்படி தேதிகளில் நடைபெற்ற விபத்துகள் பற்றிய படிவம் 18, விபத்துகள் நடைபெற்று 21 நாட்களுக்குள் பணிக்கு திரும்பியவர் பற்றிய எழுத்து மூலமான அறிக்கை, விபத்து தொடர்பான கூடுதல் விபரங்கள் அடங்கிய படிவம் 18B ஆகியவற்றை உரிய சட்ட காலத்தில் மேற்படி தொழிற்சாலையின் மேலாளரான எதிரி தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவில்லை என்பதும், தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உடற்காயம் ஏற்படுத்தும் வகையில் பணிகளை மேற்கொள்ளச் சொல்லப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது. மேலும், புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(b)ன் படி கேள்வி எழுப்பியபோது, அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் உண்மையென எதிரி ஒப்புக் கொண்டுள்ளார்.

**8.** அதன்படி, எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(4), தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(6), தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(1)(2), தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 61F–ஆகியவற்றிற்கு முரணாக செயல்பட்டு, எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92–ன் படி குற்றம் புரிந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

9. முடிவாக, எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(4)–ன் படி குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **ஒரு மாதம்** மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(6)–ன் படி குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **ஒரு மாதம்** மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும். எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 88(1)(3) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 96(1)(2)–ன் படி குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு **ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **ஒரு மாதம்** மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 61F ன் படி குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு **ரூ.20,000/–(ரூபாய் இருபதாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **மூன்று மாதம்** மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

10. எதிரியால் செலுத்தப்படும் மொத்த அபராத தொகை **ரூ.35,000/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரம்)** தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டப்பிரிவு 3(2)(l)–ன் படி தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிக்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

**11.** இந்த வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.08.10 17:55:03 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

<u>அரசுத் தரப்புச் சாட்சிகள் :–</u>

அ.சா.1 திரு.பிரேம்குமார், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திண்டுக்கல்.

<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஆய்வறிக்கை படிவம் |
| அ.சா.ஆ.2 | காரணம் கோரும் அறிவிப்பு |
| அ.சா.ஆ.3 | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| அ.சா.ஆ.4 | மேலாளரின் பதில் கடிதம் |
| அ.சா.ஆ.5 | திருத்தச்சீட்டு |
| அ.சா.ஆ.6 | வாக்குமூலங்கள் |
| அ.சா.ஆ.7 | ESI Form –12 |
| அ.சா.ஆ.8 | மேல் நடவடிக்கை தொடருதல் குறித்த கடிதம். |
| அ.சா.ஆ.9 | வழக்கு அனுமதி ஆணை |

அரசுதரப்பு சான்றுப்பொருட்கள் : – இல்லை

எதிரி தரப்பு சாட்சி, மற்றும் சான்றாவணம் :– இல்லை

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.08.10 17:54:55 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

பின் குறிப்பு:–

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

INBAKARTHICK

Digitally signed by INBAKARTHICK
Date: 2026.08.10 17:54:48 +0530